பக்கங்கள் 18 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. பயணித்த ஜீப்பும் விபத்து!

**அவர் உட்பட மூவர் காயம்**



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க பயணித்த 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 02 வியாழக்கிழமை 18.07.2024 அதிர்வு 353




சாவகச்சேரியில் செய்தியாளர் சந்திப்பை நடத்திவிட்டு

# யாழ். மண்ணில் இருந்து விடைபெற்றார் அர்ச்சுனா

- உண்மையாகச் செயற்பட்டதால் வைத்தியத்துறை மாபியாக்கள் என்னை விரட்டுகின்றனர்.
- இந்த மக்களின் அன்பு என்பது எனது இதயத்துடிப்பு.
- பேராதனை வைத்தியசாலையில் மீண்டும் எனக்கு நியமனம்.
- எனது குரல்வளையை நசுக்க முடியாது.
- எவரும் என்னை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது.
- மக்களுக்கான எனது பணி எப்போதும் தொடரும்.
- சுகாதார அமைச்சர் குழுவின் யாழ். விஜயம் கண்துடைப்பு நாடகம்.
- எல்லாம் முடிய மீண்டும் இங்கு வருவேன்.

(எஸ்.நிதர்ஷன்)

“யாழ். மக்களுக்காக உண்மையாகச் செயற்பட்டேன். அது வைத்தியத்துறை மாபியாக்களுக்கு பிடிக்கவில்லை. அதனால் என்னை இங்கிருந்து விரட்டுகின்றனர். ஆனால், இந்த மக்களின் அன்பு என்பது எனது இதயத்துடிப்பு. இந்த மண்ணில் இருந்து விடை பெறுகின்றேன்.” 04

## ஞானசார தேரருக்குப் பிணை



நான்கு வருட கடூழியச் சிறைத்தண் டனை விதிக் கப்பட்ட கலகொட அத்தே ஞானசார தேரரைப் பிணையில் விடு விக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

ஞானசார தேரரால் சமர்ப்பிக்கப்பட்ட மறுசீராய்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதன் பின்னரே இந்த உத்தரவு 04

## கிண்ணியா கடற்கரையில் பெண்ணின் சடலம் மீட்பு!

(ஏ. எச்.ஹஸ்பர்)



கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோனா கடற்கரையில் ஒரு பெண்ணின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியா, அஹமட் 04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# போதை மாத்திரைகளுடன் அண்ணனும் தம்பியும் கைது

**(ஏ.எச்.ஹஸ்பர்)**

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்போபுர பகுதியில் போதை மாத்திரைகளுடன் அண்ணன், தம்பி என இருவர் சர்தாபுர விசேட அதிரடிப் படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

26, 28 வயதுடைய சகோதரர்களே கைது செய்யப்பட்டனர் என்று உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து 362 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களையும் திருகோணமலை நீதி மன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.


சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# ராஜா - பாரதி பாஸ்கர் பங்கேற்கும் பட்டிமன்றம் நிகழ்ச்சி சனி காலை

யாழ் நகரில் பட்டிமன்றம் ராஜா – பாரதி பாஸ்கர் பங்கேற்கும் விவாத நிகழ்ச்சி 20.07.2024 சனி காலை 8.30 மணிக்கு யாழ் பொது நூலகத்தின் அருகில் உள்ள இந்திய கலாசார மத்திய நிலையத்தில் இடம் பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்

இந்த நிகழ்ச்சி இன்று 18.07.2024 வியாழன் மாலை நடைபெறுவதாக ஏற்பாடாகி இருந்த பொழுதிலும் சென்னையிலிருந்து விமான பயணம் இரத்தானதால் ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை 19.07.2024 வெள்ளி இரவு அரியாலையில் நடைபெற ஏற்பாடாகிய நிகழ்ச்சி திட்டமிட்டவாறு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.



# கௌதாரிமுனை கடலில் மிதந்து வந்த சடலம்

**(த.சுபேசன்)**

பூநகரி – கௌதாரிமுனை கடலில் ஆண் ஒருவரின் சடலம் மிதந்து வந்த நிலையில் மீட்கப்பட்டது.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 53 வயதான நபரே இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டார்.

மேற்படி நபரைக் காணவில்லை என அவரது உறவினர்களால் தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.



# இந்திய தகவல் நிலையம் பண்டாரவளையில் திறப்பு

(நடராஜா மலர்வேந்தன்)

பண்டாரவளை மாநகர சபைக்கு சொந்தமான பொது நூலக வளாகத்தில் இந்திய தகவல் நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் இடம்பெற்றது.

உலகத்துடன் அறிவைப் பகிர்வதற்கான இந்திய தேசிய திட்டத்தின் கீழ் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாச்சார உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் இந்திய தகவல் நிலையம், கண்டி உதவி இந்திய தூதர் டாக்டர் அதிரா அழைப்பின் பேரில் திறந்து வைக்கப்பட்டது.

இந்திய கலை, கலாச்சாரம், மதம், தரிசனம் மற்றும் பொருளாதாரம் பற்றிய நுண்ணறிவை வழங்கும் மதிப்புமிக்க வளமாக இந்த இந்திய தகவல் வழங்கு மையத்தை அறிமுகப்படுத்தலாம்.

இந்த நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், கண்டி உதவி இந்திய தூதர் டாக்டர் அதிரா, பண்டாரவளை மாநகர சபை ஆணையாளர் கஜேந்திரன் குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





# இலஞ்சம் வாங்கிய போக்குவரத்துப் பொலிஸார் கைது!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை, வான் எல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் பணமாக இலஞ்சம் வாங்கும்போது கைது செய்யப்பட்டார்.

ரஜ எல, கந்தளாய் எனும் முகவரியை வசிப்பிடமாகக் கொண்ட 45 வயதுடைய பொலிஸ் உத்தியோகத்தரே இலஞ்ச, ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் நேற்று மாலை கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 15ஆம் திகதியன்று மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவரைக் கடமை நேரத்தில் பரிசோதித்த மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் உரிய ஆவணங்கள் இன்மையால் இலஞ்சமாக 10 ஆயிரம் ரூபா கேட்டிருந்தார். உடனடியாக 5 ஆயிரம் ரூபா கொடுத்து விட்டுப் புறப்பட்ட அந்த நபர், மீதித் தொகை 5 ஆயிரம் ரூபாவை நேற்று மாலை 7.20 மணியளவில் கொடுக்கும்போது இலஞ்ச, ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டு கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# முல்லைத்தீவில் இரு ஆண்களால் 15 வயது சிறுமி துஷ்பிரயோகம்!

## குடும்பஸ்தர் கைது; காதலனுக்கு வலை

முல்லைத்தீவு, முள்ளியவளை பகுதியில் 15 வயதுடைய சிறுமி ஒருவர், இரு வேறு ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், சந்தேநபர்களில் ஒருவரான குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சென்ற போதே, அந்தச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சிறுமியின் காதலன் ஒருவரும், முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளை களின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவரும் சிறுமியுடன் தகாத உறவைப் பேணியமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து, மேற்படி குடும்பஸ்தர் கைது செய்யப்பட்ட நிலையில், காதலனைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். மண்ணில்...

– இவ்வாறு கவலையுடன் தெரிவித்தார் யாழ். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா.

"இன்று கொழும்பு சென்று நாளை அங்கு புதிய நியமனத்தைப் பெற்றுக் கொண்டு நான் முன்னர் கடமையாற்றிய பேராதனை வைத்தியசாலைக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளேன்." – என்றும் அவர் கூறினார்.

சாவகச்சேரியில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எனது குரல்வளையை நசுக்கி எவரும் என்னை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது. மக்களுக்கான எனது பணி எப்போதும் தொடரும்.

சுகாதார அமைச்சர் தலைமையிலான குழுவின் யாழ். விஜயம் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் கூடிய கண்துடைப்பு நாடகம் என்பது மட்டுமல்லாமல் ஏமாற்று வித்தையாகும்

யாழில் பழிவாங்கப்பட்ட நான் மீண்டும் சுகாதார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு பேராதனை வைத்தியசாலைக்கு நியமிக்கப்படவுள்ளேன். இங்கிருந்து இன்றுடன் விடை பெறுகின்றேன். இன்று கொழும்பு செல்கின்றேன். எல்லாம் முடிய மீண்டும் இங்கு வருவேன். மக்களுக்கு நன்றி." – என்றார்.

### கிண்ணியா...

லேன் வீதியைச் சேர்ந்த 33 வயதான மஹ்ரூப் முன்னவ்வரா என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண் புத்திசுவாதீனமற்றவர் என்றும், கடலில் குளிப்பதற்காக இன்று காலை அவர் கடலில் இறங்கியதால் கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### ஞானசார தேரர்...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் உள்ளிட்ட மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஞானசார தேரரை 50 ஆயிரம் ரூபா பிணையிலும், 5 இலட்சம் ரூபா பெறுமதியிலான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்த கருத்தின் ஊடாக இன, மத நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியமை உள்ளிட்ட 2 குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்டதை அடுத்து ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

### திஸ்ஸ..

சொகுசு ஜீப் கொழும்பு – ஜாவத்தை வீதியில் சலுசல பிரதேசத்துக்கு அருகில் இன்று காலை விபத்துக்குள்ளானது என்று நாரஹேன்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் திஸ்ஸ அத்தநாயக்க உட்பட மூவர் காயமடைந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரின் ஜீப்பும் கார் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் காரின் சாரதி மற்றும் பயணி ஒருவரும் அடங்குகின்றனர்.

மூவரும் நாரஹேன்பிட்டி பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று நாரஹேன்பிட்டி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், டிலான் பெரேரா ஆகியோரின் வாகனங்களும் விபத்துக்குள்ளானமை தெரிந்ததே.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சஜித்தின் மாறுகண் பார்வை

சிங்களத் தலைவர்கள் எல்லோருக்கும் ஒரு விடயத்தில் எப்போதும் மாறுகண் பார்வைதான்.

அது, தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் - அநீதிகள் - அட்டூழியங்கள் - அடக்குமுறைகள் - பற்றிய பார்வை சம்பந்தப்பட்ட விடயங்களில்.

இந்த விடயங்களில் அவர்களுக்கு எப்போதும் ஒரு பக்க பார்வைதான் தெரியும். தமிழர்களுக்கு எதிராக அநீதிகள், அட்டூழியங்கள், அடக்குமுறைகள் இழைக்கப்பட்டன என்பது அவர்கள் கண்களுக்குத் தெரியும். ஆனால் அவற்றை இழைத்தவர்கள் யார் என்பது மட்டும் அவர்களுக்கு தெரியவே தெரியாது. இதுதான் அந்த மாறுதல் - பார்வை குறைபாட்டின் - அடிப்படை.

இந்தக் குறைபாடு உள்ள அனைத்து சிங்களத் தலைவர்களின் பட்டியலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் விதிவிலக்கல்லர்.

அண்மையில் முல்லைத்தீவுக்கு சென்று அங்கு சுதந்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கிய சமயம் அவர் ஆற்றிய உரை இந்த மாறுகண் குறைபாடு தமக்கு இருப்பதை அவர் உறுதிப்படுத்தி இருக்கின்றார் என்ற கருத்தைத் தந்து நிற்கின்றது.

யுத்தத்தில் குடும்பத் தலைவரை அல்லது துணைவரை இழந்து தவிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் நலனை கவனிப்பதற்கு யுத்தம் முடிவு பெற்று 15 ஆண்டுகளாகியும் ஒரு தேசிய திட்டம் இல்லை, நாம் ஆட்சிக்கு வந்தால் அவர்களுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய திட்டம் ஒன்றை உருவாக்குவோம் என்று அங்கு வேதனை உரை நிகழ்த்தி இருக்கின்றார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ.

யுத்தத்தில் குடும்பத் தலைவரை இழந்தமையால் அவலப்படும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கவலை தெரிவித்து இருக்கின்றமை, அவர்களின் கஷ்டங்கள் - தொல்லைகள் - பிணிகள் குறித்து சிரத்தை எடுக்க முன்வந்திருக்கின்றமை எல்லாம் வரவேற்கப்பட வேண்டியவைதான்.

ஆனால், இந்தக் குடும்பங்கள் முதலில் அடிப்படையாக எதிர்பார்ப்பது தங்களது கஷ்டங்களுக்கான விமோசனங்கள் அல்ல. அந்த கஷ்டங்களை - கொடூரங்களை - கொடுமைகளை - ஏற்படுத்திய காரணங்களுக்கான நீதியைத்தான் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

நீதியை - உண்மையை - நியாயத்தை - மூடி மறைத்துக் கொண்டு நிவாரணம் வழங்கிச் சமாளிப்பது என்பது அநீதிக்கு துணை போகும் இரக்கமற்ற செயல்.

அது குறித்துத்தான் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் வன்னிக்கு வந்து புசத்தி விட்டுப் போயிருக்கின்றார் என்பதே பாதிக்கப்பட்ட அந்த மக்களின் கருத்தாகும்.

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் தமிழர்கள் மீது யுத்த குற்றங்கள் இழைக்கப்பட்டன. மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் புரியப்பட்டன. அவர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைய விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, அவை வெளிக்கொணரப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, தவறிழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பாதிப்புற்றோருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீண்டும் நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் சர்வதேச தீர்மானங்கள் மூலம் வலியுறுத்தி வருகின்றது.

அவை பற்றி எல்லாம் பாதிக்கப்பட்ட அந்த மக்களின் முன்னால் போய் கருத்து கூறாமல், அம்சடக்காக அமுக்கிக் கொண்டு, யுத்தத்தால் குடும்ப தலைவர்களை இழந்த குடும்பங்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நலனுக்கு தேசிய மட்டத்திட்டம் இல்லை என்று நீலிக் கண்ணீர் வடிப்பது மாறுகண் பார்வையுடன் கூடிய வெறும் நடிப்பு. இத்தகைய நடிப்புக்களின் தாற்பரியம் தமிழர்களுக்கு நன்கு தெரியும்.

# பசறையில் ஆடித் தேர் திருவிழா!

(நடராஜா மலர்வேந்தன்)

வரலாற்று சிறப்புமிக்க சின்னக் கதிர்காமம் என போற்றப்படுகின்ற அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயம், பசறை நகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயம், கிக்கிரிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயம், எல்டெப் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய கோயில், கோணக்கலை கீழ்பிரிவு தோட்ட அருள் மிகு ஸ்ரீ முருகன் கோயில், டெமே-ரியா மாத்தன்னை தோட்ட அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில், கோணக்கலை மேற்பிரிவு அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலயம், கல்குடாவத்தை தோட்ட அருள்மிகு முருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களின் வருடாந்த ஆடி மகோற்சவ தேர் திருவிழா நாளை மறு தினம் 20 ஆம் திகதி சனிக்கிழமை மாலை வேளையில் நடைபெறவுள் ளது.

ஆண்டுதோறும் பக்திப்பூர்வமாக நடைபெறும் தேர்திருவிழாவில் பசறை நகரில் அம்மணிவத்தை அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் முத்தேர் பவனியும் ஏனைய முருகன் ஆலயங்களின் தேர் பவனிகளும் இணைந்த பன்னிரண்டு தேர் மற்றும் இரத பவனிகள் ஓரிடத்தில் சங்கமிக்கும் சிறப்புமிக்க தேர் திருவிழாவாக இது இடம்பெறும்.

பத்து தொடக்கம் பதினாறு வரையான தேர்கள் ஓரிடத்தில் சங்கமிக்கும் சிறப்பு மிக்க தேர் விழா இலங்கையில் பசறை பிரதேசத்திலேயே நடைபெற்று வரு கின்றமைக் குறிப்பிடத்தக்கது.





# கிழக்கு ஆண்களுக்கான கபடி; நிந்தவூர் பாடசாலைகள் சாதனை!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்களில் ஒன்றான ஆண்களுக்கான கபடிப் போட்டிகளில் நிந்தவூர் மதினா மகா வித்தியாலயம் 17 மற்றும் 20 வயது பிரிவுகளில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆண்களுக்கான 17 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட கபடிப் போட்டிகளில் நிந்தவூர் அல் - அஷ்ரக் தேசிய கல்லூரி இரண்டாம் இடங்களைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.





# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

**(தலவாக்கலை)**

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக 2005 - 2006 ஆம் வருட முகாமைத்துவ பீட மாணவர்களின் பங்களிப்பில், நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட கஷ்டப் பிரதேச பாடசாலையான தலவாக்கலை கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்தப் பாடசாலையின் ஆசிரியர் பி.கேதீஸ் ஊடாக கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்ட பந்துகள் வழங்கப்பட்டன. பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ்ஸிடம் அவை வழங்கப்பட்டன.





# மடு தம்பனைக்குளத்தில் நடந்த ஆடிப்பிறப்பு விழா நிகழ்வுகள்

**( வாஸ் கூஞ்ஞ)**

தமிழர்களின் பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தம்பனைக் குளம் கிராமத்தில் நேற்று புதன்கிழமை (17) காலை 8 மணி முதல் நடைபெற்றது.

வவுனியா – மன்னார் வீதியில் அமைந்துள்ள தம்பனைக் குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் மடு பிரதேச செயலாளர் கீ. பீட் நிஜாகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையிலும் வழிப்படுத்தலிலும் மடு பிரதேச செயலகம் இந்த விழாவை ஒழுங்கு செய்திருந்தது.

ஆரம்ப நிகழ்வாக ஆடிப்பிறப்பு பண்டிகையை அறிமுகம் செய்து வைத்த யாழ்ப்பாணம் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் திருவுருவப்படத்துக்கு மடு பிரதேச செயலாளர் கீ. பீட் நிஜாகரன் மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து பொது மக்கள் மலர் வணக்கம் செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து ‘ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை’ என்ற பாடலைத் தம்பனைக் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் இசைத்தனர்.

அடுத்து மடு பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் மனோகராசா பிரதீபன் ‘ஆடிப்பிறப்பும் தமிழர் பாரம்பரியமும்’ என்ற தலைப்பில் விசேட சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து தம்பனைக் குளம் அ.த.க. பாடசாலை மாணவர்கள் மற்றும் தம்பனைக்குளம் முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, கவிதை மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது கலை நிகழ்வுகளை வழங்கிய மாணவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் பாரம்பரிய முறைப்படி சிரட்டைகளில் ஆடிக்கூழ் மற்றும் கொளுக்கட்டை என்பன வழங்கப்பட்டன.

சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் இந்த நிகழ்வுகளை மிகவும் நேர்த்தியாக நெறிப்படுத்தினார்.









# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்குக் கதிரைகள்!

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்கென சுமார் ஐந்தரை லட்சம் ரூபா பெறுமதியான கதிரைகள் அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவால் பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸிடம் உத்தியோக பூர்வமாக இன்று (18) கையளிக்கப்பட்டது.

இது பழைய மாணவர் சங்க செயலாளரும் அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளருமான எச்.பி.அனீஸின் வேண்டுகோளுக்கு இணங்க அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம். இர்பான் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம். இர்பான், அம்பாறை மாவட்ட செயலக கணக்காளர், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், மற்றும் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள்,பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கு பளுதூக்கல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜன சாதனை



















(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாடுக்களில்பளுதூக்கலில்யாழ்ப்பாணம்,தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி மாணவர்கள் அதிக பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் இவ்வருடம் அதிக பதக்கங்களைப் பெற்று தெல்லிப்பளை மகாஜனா வென்றுள்ளது.

ஆண்கள், பெண்களுக்கான பழுதூக்கல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் மூன்று தங்கம், மூன்று வெள்ளி மற்றும் மூன்று வெண்கலப் பதக்கங்கள் உள்ளிட்ட 9 பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

17வயதுபிரிவு வீ.சாதுரிஜன் 49கிலோ ஆண்கள் இடைப்பிரிவிலும், யூ.ரிஷிவன் 73 கிலோ ஆண்கள் இடை பிரிவிலும், 40 கிலோ ஏ.ஜெஸ்வினி பெண்கள் பிரிவிலும் வெள்ளிப் பதக்கங்களையும் –

20 வயது பிரிவில் கே.கேதுஜன் 55 கிலோ ஆண்கள் இடை பிரிவிலும், பீ.பிரகீஷ் 89 கிலோ ஆண்கள் இடை பிரிவிலும், எஸ்.மரியஹர்சின் 87 கிலோ பெண்கள் பிரிவிலும் வெண்கலப் பதக்கங்களையும்,

20வயது பிரிவு ஜே.ஜெனுசின் 102 கிலோ ஆண்கள் பிரிவிலும், 17வயது பிரிவில் ஆர்.சிறிவித்தகி 71கிலோ பெண்கள் பிரிவிலும், எஸ்.ஷனுஜா 81கிலோ பெண்கள் பிரிவிலும் தங்கப் பதக்கங்களையும் சுவீகரித்துக் கொண்டனர்.






# ஜனாதிபதியின் புலமைப்பரிசில் திட்டம் அம்பாறையில் 1112 மாணவர்களுக்கு!

**(பாறுக் ஷிஹான்)**

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைய கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பொருளாதார பின்னடைவை எதிர்நோக்குகின்ற திறமையுடைய ஒரு லட்சம் மாணவர்களுக்கும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் 6 ஆயிரம் பேருக்கும் புலமைப் பரிசில் வழங்கும் தேசிய வேலைத் திட்டத்துக்கு அமைவாக நடைபெறும் அம்பாறை மாவட்டத்தில் புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் அக்கரைப்பற்று ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் அரங்கத்தில் நேற்று (17) இரண்டு கட்டங்களாக இடம்பெற்றது.

இதற்கமைய காலை ஒரு அமர்வு அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். ஜெகராஜன் தலைமையிலும் நண்பகல் மற்றுமொரு அமர்வு அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தலைமையிலும் இரு பிரிவுகளாக நடைபெற்றன.

அபிவிருத்தி லொத்தர் சபையின் அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் உள்ளிட்டோர் பிரதம அதிதிகளாக பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி செயலகத்தின் பிரதிநிதிகள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட செயலக உயரதிகாரிகள்,பிரதேச செயலாளர்கள், கல்வியதிகாரிகள் மற்றும் மாணவர்கள், மாணவர்களது பெற்றோர் கலந்து கொண்டனர்.

இதன் போது கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோவில், கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பொருளாதார பின்னடைவை எதிர்நோக்கும் திறமையுடைய தரம் ஒன்று தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் 872 மாணவர்களுக்கும் க.பொ.த உயர்தர மாணவர்கள் 240 பேருக்கும் புலமைப் பரிசில்கள் இதன்போது வழங்கப்பட்டன.












# கல்முனை பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவுக்குப் புகையூட்டல் இயந்திரம்

(றியாஸ் ஆதம்)

உலக வங்கியின் நிதி உதவியின் மூலம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையை வலுப்படுத்தும் திட்டத்தின் ஊடாக கல்முனை பிராந்திய சுகாதார நிறுவனங்களுக்கு தளபாடங்கள், மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் கீழ் உள்ள பூச்சியல் ஆய்வு கூடத்தில் அவசியத் தேவையாகக் காணப்பட்ட புகையூட்டல் இயந்திரம் நேற்று (17) அந்தப் பிரிவுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இதனை வழங்கும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பஸால் பணிப்பாளரிடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி, உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# திருக்கோவில் கொடியேற்றம் இன்று!

(வடிவேல் டினேஸ்)

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசைதிருவிழா இன்று (18) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில், ஆலயகுரு சிவஸ்ரீ அங்குச நாதக்குருக்கள் ஒத்துழைப்பில் கொடியேற்றம் நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் திருவிழா ஆரம்பமாகியது.

திருவிழா 18 நாள்கள் நடைபெற்று ஒகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி ஆடி அமாவாசை தினத்தன்று சமுத்திர தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவடையும்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு கால பூஜைகள் செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருகிறது.









# யானையால் பாதிக்கப்பட்டோருக்கு காரைதீவுப் பிரதேசத்தில் நஷ்டஈடு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கடந்த வருடம் ஓகஸ்ட், செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் யானைத் தாக்கத்தால் காரைதீவு-07,10,11,12, மாவடிப்பள்ளி கிழக்கு மற்றும் மாவடிப்பள்ளி மேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சொத்துக்கள் பாதிப்படைந்த 27 நபர்களுக்கான நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

18 லட்சத்து 54 ஆயிரத்து 200 ரூபா இதற்று ஒதுக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில், அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் நேற்று (17) கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்தீபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுகளுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.






# சாய்ந்தமருதில் இரத்ததான முகாம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யூ.எஸ்.எப். ஸ்ரீலங்கா அமைப்பின் 09 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டுக் கல்முனை அஷ்ரஃப் ஞாபகர்த்த வைத்தியாசாலையின் நிலவும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக மையோன் கல்வி உதவி நிதியத்தின் பூரண அனுசரனையுடன் "உதிரம் கொடுத்து உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளில் இரத்தான முகமொன்று அண்மையில் சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.



பெரும் எண்ணிக்கையான இளைஞர்களும் யுவதிகளும் இதில் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர்.

EVEREST
FURNITURE

HIGH QUALITY PRODUCTS





(416) 332-0721

everestfurniture.ca

EverestFurnitureInc

80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# இலங்கை எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கம் எது?

## சுவாமி விபுலானந்த அடிகளார் அன்று விடையளித்தார்

**நாளை அவருடைய 77ஆவது மகா சமாதி தினம்!**



Swami Vipulananda
சுவாமி விபுலானந்தர்
(1892 - 1947)
ஸ்தாபகர்: ராமகிருஷ்ண மிஷன், இலங்கை
Founder:Ramakrishna Mission, Sri Lanka

இலங்கை எதிர்பார்க்கும் தேசியநல்லிணக்கம், இலங்கையில் கல்வி முறைமை எப்படி அமையவேண்டும்? இனநல்லிணக்கம் தேசியநல்லிணக்கம் எவ்வாறு அமையவேண்டும்? என்பதை இற்றைக்கு 100 வருடங்களுக்கு முன்பே ஒரு தீர்க்க தரிசி சொல்லியிருந்தார்.

அவர்தான் அகிலம் போற்றும் உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ்வித்தகன் சுவாமி விபுலாநந்த அடிகளார். ஆம் உண்மையில் அவர் ஒரு தீர்க்க தரிசி.

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் மகா சமாதி அடைந்து 77 வருடங்களாகின்றன.

அடிகளார் 1924 இல் சுவாமி சிவானந்தரிடம் ஞானோபதேசம் பெற்று துறவியாகி சுவாமி விபுலானந்தராகி இந்த வருடம் (2024) நூறு வருடங்களாகின்றன.

சுவாமி விபுலானந்த அடிகளாரின் துறவற தின நூற்றாண்டில் வருகின்ற முதலாவது சிரார்த்த தினம் இன்றாகும்.

அடிகளார் இந்த அவனியில் பிறந்து 132 வருடங்களாகின்றன. அவர் பிறந்தது 1892.03.27 இல் ஆகும். 20 ஆம் நூற்றாண்டின் ஈடிணையற்ற பேரறிஞர் சுவாமி விபுலாநந்த அடிகளார் ஆவார்.

அவரது எல்லையற்ற மேதா விலாசம் காரணமாக உலகின் பல பாகங்களிலும் அவர் பெயரில் பல அமைப்புகள் இயங்கி வருகின்றன. அவருக்காகப் பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பல ஆய்வரங்குகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவர் 1947 இல் சிவபதமடைந்தார்.

### விபுலானந்த அடிகளார் அன்று சொன்னது

பலமொழிக்கல்வி தேசிய ஒருமைப்பாட்டையும் நாட்டினுள்ளும் நாடுகளிடையேயும் ஐக்கியத்தை உறுதிப்படுத்துகின்றது. சர்வதேச நல்லுறவையும் நன்முறையில் விருத்தி செய்வதற்குப் பல மொழிகளை ஆண்களும் பெண்களும் கற்றல் வேண்டும் என்றார்.

பலதரப்பட்ட பாசைகளைக் கற்பதால் அறிவு விசாலிக்கும் என்று கூறிய அவர் பாடசாலைகளில் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு அப்பால் தொழில் கல்வியையும் வழங்குவதே விரிவுக் கல்வியாகும்.

நல்ல திடகாத்திரமான உடல் நிலை உவப்பான உளவளர்ச்சி என்பனவும் கட்டாயமானவை என 1941 இல் கூறினார்.

அதனால்தான் 1970களில் ஜேவிபி புட்சி அதனைத் தொடர்ந்து பிரதமர் ஶ்ரீமாவோ அம்மையார் இலங்கை மக்களை நாட்டுப்பற்றுடைய மக்களாக மாற்றவேண்டுமெனின் புதிய கல்வித் திட்டத்தை அறிமுகப் படுத்த வேண்டும் என்று எண்ணி க.பொ.த. சாதாரண பரிட்சை நிறுத்தப்பட்டு பதிலாக தேசிய கல்விச் சான்றிதழ் எனும் புதிய பரீட்சை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

முக்கிய பாடங்களுடன் தொழில் கல்வியும் உடற்கல்வியும் கவின் கலைகளும் கட்டாய பாடமாக்கப்பட்டன. இம்மாற்றம் முழுக்க முழுக்க விபுலானந்த அடிகளாரின் கல்விச் சிந்தனையில் எழுந்ததே என்பதை யாரும் மறக்க முடியாது.

விரிவுக் கல்வியில் பெரிதும் நாட்டமுள்ள தாகூர் காந்தி பிறந்த நாட்டில் இன்னும் விரிவுக் கல்வி நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அப்படி இனங்கள் ஒன்றாக நல்லிணக்கத்துடனும் இன சௌயன்யத்துடனிருக்கவேண்டும் என்பதை அன்றே சிந்தித்தவர் சுவாமிகள். சிங்களமும் இஸ்லாமும் அரபும் சமஸ்கிருதமும் அவர் தோற்றுவித்த கல்லடி சிவானந்தாவில் கற்பிக்க ஏற்பாடுசெய்தவர். காத்தான்குடி முஸ்லிம் மாணவர்களும் பயில வேண்டும் என்பதற்காக அவர் சிவானந்தாவை கல்லடியில் அமைத்தார்.

சுவாமியின் சமாதி தினம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**விபுலமாமணி**
**வி.ரி.சகாதேவராஜா,**
(முன்னாள் தலைவர்,
சுவாமி விபுலானந்த
ஞாபகார்த்த பணிமன்றம், காரைதீவு.)



# இந்தியா எங்களின் மிக நெருங்கிய கூட்டாளி அமெ. இராணுவத் தலைமையகம் கூறுகிறது!

**வாஷிங்டன்,ஜூலை18**

இந்தியாவை தங்களின் மிக நெருங்கிய கூட்டாளி என அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் – ரஷ்யப் போர் தொடங்கியதற்கு பிறகு முதல் முறையாக பிரதமர் மோடி அண்மையில் ரஷ்யாவுக்கு பயணம் மேற்கொண்டார். இந்த பயணத்தின்போது அவர் அதிபர் புடினை சந்தித்து இரு தரப்பு உறவுகள் குறித்தும், பரஸ்பர நலன் சார்ந்த சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விரிவாக ஆலோசனை நடத்தினார்.

ரஷ்யாவுடன் இந்தியா நட்பு பாராட்டுவதை அமெரிக்கா கடுமையாக எதிர்த்து வரும் நிலையில் மோடியின் இந்தப் பயணம் அமைந்தது. இதனால் மோடியின் ரஷ்ய பயணத்தை அமெரிக்க உன்னிப்பாக கவனித்தது.

இந்த நிலையில் வொஷிங்டனில் பத்திரிகையாளர்களை சந்தித்த அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் செய்தி தொடர்பாளர் பாட் ரைடரிடம், மோடியின் ரஷ்யப் பயணத்துக்கு பிறகு அமெரிக்கா – இந்தியா இடையேயான இராணுவ உறவு எப்படி உள்ளது என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்து பேசிய பாட் ரைடர், "இந்தியா எங்களின் நெருங்கிய கூட்டாளி ஆகும். அந்த கூட்டாண்மையை தொடர்ந்து மேம்படுத்த நாங்கள் எதிர்நோக்குகிறோம்" என்றார்.

# அடுத்தடுத்து இடிந்து விழுகின்ற பாலங்கள் பீகாரில் ஒரே மாதத்தில் 15ஆவது சம்பவம்

**பீகார்,ஜூலை18**



பீகாரில் பாலங்கள் இடிந்து விழுவது தொடர்கதையாகியுள்ளது. அவ்வகையில் நேற்று மாலை மேலும் ஒரு பாலம் இடிந்து விழுந்தது.

அம்ஹாரா கிராமத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பர்மான் ஆற்றுப் பாலம் இடிந்து விழுந்தது.

2008 இல் கட்டப்பட்ட இந்த பாலம், 2017 இல் ஏற்பட்ட வெள்ளத்தில் முற்றிலும் சேதமடைந்து மக்கள் பயன்படுத்த தகுதியற்றது என அறிவிக்கப்பட்டது. அதன்பின் 2021ல் புனரமைக்கப்பட்டு மீண்டும் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

பீகாரில் ஒரே மாதத்தில் இடிந்து விழுந்த 15 ஆவது பாலம் இதுவாகும். ஏற்கனவே பாலம் விபத்துகள் தொடர்பாக 15 பொறியாளர்கள் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

# புதிய காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவாகிறது வானிலை மையம் வெளியிட்ட முக்கிய தகவல்

புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு மத்திய மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடலில் உருவாகலாம் என இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

- தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.
- வங்கக்கடலில் அடுத்த 24 மணி நேரத்தில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்பு உள்ளது.
- புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி மேற்கு மத்திய மற்றும் அதை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடலில் உருவாகலாம்.
- தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று மிககனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.
- தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் மிக கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. – என்று தெரிவித்துள்ளது.





# சீனாவில் வணிக வளாகத்தில் தீ! 16 பேர் பலி; முப்பது பேர் மீட்பு!!

பீஜிங்,ஜூலை 18

சீனாவின் மேற்கே அமைந்த சிச்சுவான் மாகாணத்தில் ஜிங்காங் நகரில் வணிக வளாகம் ஒன்றில் நேற்றிரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் மற்றும் அவசரகால பணியாளர்கள் ஏறக்குறைய 300-க்கும் மேற்பட்டோர் சம்பவ பகுதிக்கு சென்றனர். அவர்கள் தீயை கட்டுக்குள் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டனர். தீ விபத்து ஏற்பட்டு 2 மணிநேரத்திற்கு பின்னர் தீயணைக்கப்பட்டது.

இதில் பலர் சிக்கி கொண்டனர். அவர்களில் 30 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டு உள்ளனர். எனினும், மொத்தம் எத்தனை பேர் உள்ளே சிக்கியிருந்தனர் என்ற விவரங்கள் வெளியிடப்படவில்லை. தீ விபத்தில் சிக்கி 16 பேர் உயிரிழந்து உள்ளனர்.


சீனாவில், போதிய பாதுகாப்பு ஒழுங்குமுறைகள் மற்றும் சட்ட விதிகள் இல்லாத நிலையில், அடிக்கடி இதுபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன.

கடந்த ஜனவரியில், தென்கிழக்கு சீனாவில் கட்டடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 39 பேர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்தனர்.

இதற்கு சில நாள்களுக்கு முன் அந்நாட்டின் மத்திய பகுதியில் அமைந்த ஹெனான் மாகாணத்தில் பள்ளிக்கூடம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 13 குழந்தைகள் உயிரிழந்தனர்.

# ஜனாதிபதி பைடனுக்கு கொரோனாத் தொற்று!

## சுய தனிமைப்படுத்தலில் அவர்



வொஷிங்டன்,ஜூலை18

லாஸ் வேகாசில் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள ஜோ பைடனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா பாதிப்புக்கான லேசான அறிகுறிகளைக் காட்டுவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வெள்ளை மாளிகை வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில் – "அதிபர் ஜோ பைடனுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் (ஜோ பைடன்) டெலாவேருக்குத் திரும்புவார். அங்கு அவர் சுயமாக தனிமைப்படுத்தப்படுவார். அந்த நேரத்தில் தனது அனைத்து கடமைகளையும் முழுமையாகச் செய்வார்" என்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதிபர் ஜோபைடன் தனது எக்ஸ் வலைதளத்தில், "இன்று மதியம் எனக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது, நான் தற்போது நன்றாக இருப்பதாக உணர்கிறேன், அனைவரின் வாழ்த்துக்களுக்கும் நன்றி. நான் குணமடைவதற்காக தனிமைப்படுத்திக் கொள்ள உள்ளேன். அந்த நேரத்தில் அமெரிக்க மக்களுக்கான பணியை தொடர்ந்து செய்வேன்" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

81 வயதான பைடன், லாஸ் வேகாசில் நடந்த என்.ஏ.ஏ.சி.பி. தேசிய மாநாட்டில் கலந்து கொண்ட நிலையில், நேற்று அவருக்கு நடத்தப்பட்ட சோதனையில் கொரோனா இருப்பது உறுதிசெய்யப்பட்டது. முன்னதாக அந்த மாநாட்டில் பேசிய அவர் டொனால்டு டிரம்பின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்தார். மேலும் நாட்டில் துப்பாக்கி வன்முறை அதிகரிப்பதை கடுமையாக கண்டித்தார்.

கனடா முரசு
பக்கங்கள் 06
வியாழக்கிழமை 18/07/2024

## அமைச்சரவையின் சுருக்கமான கூட்டம்

ஒன்ராரியோ, ஜூலை 18
ஆளும் லிபரல் கட்சியின் அமைச்சரவைக்கு இந்த வெள்ளிக்கிழமை ஒரு சுருக்கமான கூட்டம் நடைபெறும் என்று பிரதமர் அலுவலகம் C5




# டொரன்டோவில் போக்குவரத்து நெரிசலினால் நகரின் பொருளாதாரத்துக்குப் பெரும் பாதிப்பு

ஒன்ராரியோ, ஜூலை 18
டொரன்டோவில் போக்குவரத்து நெரிசல் நிலைமைகள் மோசமடைந்துள்ளன என அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகன போக்குவரத்து நெரிசல் நிலைமையானது நகரின் பொருளாதாரத்தை பாதிக்கும் எனவும் இந்த கருத்துக்கணிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. டொரன்டோவின் பிராந்திய வர்த்தக சபை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. C5



# பாதுகாப்புச் செலவின இலக்கை விரைவாக எட்டுமாறு கோரிக்கை

## மாகாண முதல்வர்கள் ஒன்றுபட்டுத் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஜூலை 18
மாகாண முதல்வர்களுக்கிடையேயான மூன்று நாள் சந்திப்பை நடத்திய மாகாண மற்றும் பிராந்தியத் தலைவர்கள், ஒட்டாவாவின் வரவிருக்கும் தேர்தலுக்கு முன்னதாக அமெரிக்காவுடனான நாட்டின் வர்த்தக உறவைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புச் செலவினங்களை விரைவாக அதிகரிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

ஹாலிஃபாக்ஸில் நடைபெற்றுவந்த மாகாண முதல்வர்களின் சந்திப்பின் நிறைவுநாள் ஊடகவியலாளர் சந்திப்பில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைந்தது இரண்டு C5




# 'கனேடியத் தமிழர் பேரவை' அமைப்பு மீது கனேடியத் தமிழர்கள் நம்பிக்கை இழப்பு!

## கனேடியத் தமிழர் கூட்டு விசனத்துடன் அறிக்கை

ஒன்ராறியோ, ஜூலை 18

ஈழம் முதல் கனடாவின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் தமிழர்கள், கனேடியத் தமிழர் பேரவையில் நம்பிக்கை இழந்துவிட்டனர் எனவும், தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த கனேடியத் தமிழர் பேரவை தகுதியற்றது எனவும் கனேடியத் தமிழர் பேரவையில் தெரிவித்துள்ளது.

கனேடியத் தமிழர் கூட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-


'பொறுப்புக்கூறல், ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, சட்ட நியமங்களின் அடிப்படையிலான நிர்வாகம் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளுடன் கனேடியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் கனேடியத் தமிழர் பேரவை ('CTC') தொடர்ந்து தோல்வியடைந்திருப்பதை கனேடியத் தமிழர் கூட்டு ('கூட்டு') வெளிப்படையாகக் கண்டிக்கிறது.

கனடாவில் சிவில் சமூகம் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களினாலும், தமிழ் இனப்படுகொலை பரவலாக அங்கீகரிக்கப்பட்ட போதிலும், CTC கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக அதனை அப்பட்டமான மௌனத்துடன் மறுத்து வந்துள்ளது.

தமிழ்ச் சமூகம், கூட்டு ஆகியவற்றின் தொடர் அழுத்தத்தின் பின்னர், CTC அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலம், தமிழ் இனப்படுகொலையை ஒற்றை வரியில் ஏற்றுக்கொண்ட போதிலும், அது போதுமானதாக இல்லை. இது ஈழத்தமிழர்களின் கோட்பாடுகளுக்கான நேர்மையான வாதத்தையோ அல்லது நீண்டகால அர்ப்பணிப்புக்கான உத்தரவாதத்தையோ வழங்கவில்லை.

மேலும், இமயமலைப் பிரகடனத்தில் CTC யின் அவமானகரமான ஈடுபாடு, நீதியைப் பெறுவதில் சர்வதேச ரீதியான பரப்புரை முயற்சிகளின் முன்னேற்றத்தை நாசம் செய்துள்ளது. CTC யின் நகர்வுகள் இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் உட்பட, ஈழத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் மற்றும் வரலாற்று அநீதிகளை மூடிமறைக்க இலங்கை அரசாங்கத்திற்கு உதவுகிறது. CTC திட்டமிட்டோஅல்லதுதிட்டமிடாமலோ இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுடன் தன்னைத் திறம்பட இணைந்துள்ளது.

இமயமலைப் பிரகடனத்தில் பேரவையின் பங்கேற்பு, இலங்கையின் போர்க் குற்றவாளியும், கனடாவால் தடை செய்யப்பட்டவருமான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவு



CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

ஜூலை 17, 2024

**ஈழம் முதல் கனடாவின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் தமிழர்கள், கனேடியத் தமிழர் பேரவையில் நம்பிக்கை இழந்துவிட்டனர்!**

**தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த CTC தகுதியற்றது!**

பொறுப்புக்கூறல், ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, சட்ட நியமங்களின் அடிப்படையிலான நிர்வாகம் ஆகிய அடிப்படைக் கோட்பாடுகளுடன் கனேடியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் கனேடியத் தமிழர் பேரவை ("CTC") தொடர்ந்து தோல்வியடைந்திருப்பதை கனேடியத் தமிழர் கூட்டு ("கூட்டு") வெளிப்படையாகக் கண்டிக்கிறது.

கனடாவில் சிவில் சமூகம் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களினாலும், தமிழ் இனப்படுகொலை பரவலாக அங்கீகரிக்கப்பட்ட போதிலும், CTC கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக அதனை அப்பட்டமான மௌனத்துடன் மறுத்து வந்துள்ளது.

தமிழ்ச் சமூகம், கூட்டு ஆகியவற்றின் தொடர் அழுத்தத்தின் பின்னர், CTC அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலம், தமிழ் இனப்படுகொலையை ஒற்றை வரியில் ஏற்றுக்கொண்ட போதிலும், அது போதுமானதாக இல்லை. இது ஈழத்தமிழர்களின் கோட்பாடுகளுக்கான நேர்மையான வாதத்தையோ அல்லது நீண்டகால அர்ப்பணிப்புக்கான உத்தரவாதத்தையோ வழங்கவில்லை.

மேலும், இமயமலைப் பிரகடனத்தில் CTCயின் அவமானகரமான ஈடுபாடு, நீதியைப் பெறுவதில் சர்வதேச ரீதியான பரப்புரை முயற்சிகளின் முன்னேற்றத்தை நாசம் செய்துள்ளது. CTC யின் நகர்வுகள் இனப்படுகொலை, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் உட்பட , ஈழத்தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அட்டூழியங்கள் மற்றும் வரலாற்று அநீதிகளை மூடிமறைக்க இலங்கை அரசாங்கத்திற்கு உதவுகிறது. CTC திட்டமிட்டோ அல்லது திட்டமிடாமலோ இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுடன் தன்னைத் திறம்பட இணைந்துள்ளது.

இமயமலைப் பிரகடனத்தில் பேரவையின் பங்கேற்பு, இலங்கையின் போர்க் குற்றவாளியும், கனடாவால் தடை செய்யப்பட்டவருமான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபசவுடன் ஒளிப்படம் எடுத்ததன் மூலம், மேலும் மோசமடைந்தது. பேரவையின் முன்னாள் தலைவர் ரவீனா ராஜசிங்கத்தின் ஆதரவுடன் குறித்த சந்திப்பு நடத்தப்பட்டமையும், அச்சந்திப்பையும், அதனுடன் தொடர்புடைய ஒளிப்படப் பிடிப்பையும் நியாயப்படுத்தும் கருத்துக்களையும் அவர் (ரவீனா) பின்னர் வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில், புதிய தலைவர், இயக்குனர் குழு நியமிக்கப்பட்டது. இந்த செயல்முறை வெளிப்படைத்தன்மை அற்ற, குறித்த அமைப்பின் எதேச்சாதிகாரத் தன்மையின் உச்சநிலையை அம்பலப்படுத்தியது. இது பெயருக்கு மட்டுமான "தேர்தல்" என்பதால், இது செயற்பாட்டு ரீதியான நியமனம் மட்டுமே என்பதே உண்மையாகும்.

- 1 -

தொடர்ச்சி▼

# ‘கனேடியத் தமிழர் பேரவை’ அமைப்பு மீது கனேடியத் தமிழர்கள் நம்பிக்கை இழப்பு!

தொடர்ச்சி▲

டன் ஒளிப்படம் எடுத்ததன் மூலம், மேலும் மோசமடைந்தது. பேரவையின் முன்னாள் தலைவர் ரவீனா ராஜசிங்கத்தின் ஆதரவுடன் குறித்த சந்திப்பு நடத்தப்பப்பட்டமையும், அச்சந்திப்பையும், அதனுடன் தொடர்புடைய ஒளிப்படப் பிடிப்பையும் நியாயப்படுத்தும் கருத்துக்களையும் அவர் (ரவீனா) பின்னர் வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில், புதிய தலைவர், இயக்குனர் குழு நியமிக்கப்பட்டது. இந்த செயல்முறை வெளிப்படைத் தன்மை அற்ற, குறித்த அமைப்பின் எதேச்சாதிகாரத் தன்மையின் உச்ச நிலையை அம்பலப்படுத்தியது. இது பெயருக்கு மட்டுமான ‘தேர்தல்’ என்பதால், இது செயற்பாட்டு ரீதியான நியமனம் மட்டுமே என்பதே உண்மையாகும். இந்த நியமனம் பழைய முகங்களைப் புதிய பதவி நிலைகளுக்குக் கொண்டுவந்துள்ளது - அது மாற்றத்தைக் குறிக்கும் முகப்பு மாற்ற சமிக்ஞை மட்டுமே.

புதிதாக நியமிக்கப்பட்டவர்கள், இந்த அமைப்பிற்குள் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளதோடு, அமைப்பின் இன்றைய மோசமான நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களும் ஆவர். ஈழத் தமிழர்களுக்குப் பாதகமான இந்த அமைப்பின் எதேச்சதிகார நடவடிக்கையை அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர். அவர்கள் பிரச்சினையின் தீர்வாக இல்லாமல் - அதன் ஒரு பகுதியாக உள்ளனர்.

CTC தொடர்ந்து தவறான திசையில் பயணிக்கிறது. சீர்திருத்தம் குறித்த எந்த நம்பிக்கையும் சமீபத்தில் சிதைந்துவிட்டது. ஈழத் தமிழர்களின் நலனுக்காக இந்த அமைப்பைச் சீர்திருத்துவதற்கான எண்ணம், ஊக்கம், தயார்நிலை ஆகியவை CTC யிடம் இல்லை என்பதைக் கூட்டுடன் நடத்திய நேரடி சந்திப்பு தெளிவுபடுத்தி விட்டது.

இன்றைய போக்கு நிலையில், இலங்கை அரசாங்கத்துடனான அனைத்துத் தொடர்பாடல்கள், ஈடுபாடுகள் குறித்த விபரங்களை ஆழமான ஆய்வுக்குட்படுத்தும் நோக்கில், முழுமையாக வெளிப்படுத்துவது CTC க்கு கட்டாயமானதாகும். ஈழத் தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வழிகளில், இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணுவதில் பேரவை தொடர்ந்து ஆதரவான ஈடுபாட்டைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

கூட்டு மற்றும் சமூகத்தின் ஒற்றுமையான முயற்சிகள் காரணமாக, CTC யில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டது. இதில் மிகவும் சர்ச்சைக்குரிய உலகத் தமிழர் பேரவையில் இருந்து CTC விலகியதும் அடங்குகிறது. இருப்பினும், பேரவை எடுத்த நடவடிக்கைகள் போதுமானவை அல்ல.

இந்தத் தருணத்தில், கனேடியத் தமிழர்கள் CTC மீதான நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டனர். தமது கோரிக்கைகளை வலுப்படுத்துமாறும், மாற்றத்திற்கான பரப்புரைகளை தொடருமாறும் நாங்கள் சமூகத்தை வலியுறுத்துகின்றோம். எங்கள் சமூகத்தின் நம்பிக்கையை CTC தொடர்ந்து மீறிவருகிறது. சமூகம் CTC யை மீளவும் தமது கட்டுப்பாட்டில் எடுப்பது காட்டாயமானதாகும்.

கனேடியத் தமிழர்களுக்கும், CTC க்கும் இடையே உள்ள ஆழமான தொடர்பற்ற இடைவெளியை மாநகர, மாகாண, மத்திய அரசாங்கங்கள் அங்கீகரிக்க வேண்டும் எனக் கூட்டு கோரிக்கை விடுக்கிறது. தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது ‘தமிழர் விழா’வை (TAMIL FEST) நடத்தவோ, CTC க்கு இனியும் தார்மீக அதிகாரம் இல்லை. மேலும், தேர்தல்கள் அரங்கேற்றப்பட்டு, உறுப்பினர்

தொடர்ச்சி▼

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

இந்த நியமனம் பழைய முகங்களைப் புதிய பதவி நிலைகளுக்குக் கொண்டுவந்துள்ளது - அது மாற்றத்தைக் குறிக்கும் முகப்பு மாற்ற சமிக்ஞை மட்டுமே. புதிதாக நியமிக்கப்பட்டவர்கள், இந்த அமைப்பிற்குள் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளதோடு, அமைப்பின் இன்றைய மோசமான நிலைக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களும் ஆகும். ஈழத்தமிழர்களுக்குப் பாதகமான இந்த அமைப்பின் எதேச்சதிகார நடவடிக்கையை அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றனர். அவர்கள் பிரச்சினையின் தீர்வாக இல்லாமல் - அதன் ஒரு பகுதியாக உள்ளனர்.

CTC தொடர்ந்து தவறான திசையில் பயணிக்கிறது. சீர்திருத்தம் குறித்த எந்த நம்பிக்கையும் சமீபத்தில் சிதைந்துவிட்டது. ஈழத்தமிழர்களின் நலனுக்காக இந்த அமைப்பைச் சீர்திருத்துவதற்கான எண்ணம், ஊக்கம், தயார்நிலை ஆகியவை CTC யிடம் இல்லை என்பதைக் கூட்டுடன் நடத்திய நேரடி சந்திப்பு தெளிவுபடுத்திவிட்டது.

இன்றைய போக்கு நிலையில், இலங்கை அரசாங்கத்துடனான அனைத்துத் தொடர்பாடல்கள், ஈடுபாடுகள் குறித்த விபரங்களை ஆழமான ஆய்வுக்குட்படுத்தும் நோக்கில், முழுமையாக வெளிப்படுத்துவது CTC க்கு கட்டாயமானதாகும். ஈழத் தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வழிகளில், இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணுவதில் பேரவை தொடர்ந்து ஆதரவான ஈடுபாட்டைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

கூட்டு மற்றும் சமூகத்தின் ஒற்றுமையான முயற்சிகள் காரணமாக, CTC யில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டது. இதில் மிகவும் சர்ச்சைக்குரிய உலகத்தமிழர் பேரவையில் இருந்து CTC விலகியதும் அடங்குகிறது. இருப்பினும், பேரவை எடுத்த நடவடிக்கைகள் போதுமானவை அல்ல.

இந்தத் தருணத்தில், கனேடியத் தமிழர்கள் CTC மீதான நம்பிக்கையை முழுமையாக இழந்துவிட்டனர். தமது கோரிக்கைகளை வலுப்படுத்துமாறும், மாற்றத்திற்கான பரப்புரைகளை தொடருமாறும் நாங்கள் சமூகத்தை வலியுறுத்துகின்றோம். எங்கள் சமூகத்தின் நம்பிக்கையை CTC தொடர்ந்து மீறிவருகிறது. சமூகம் CTCயை மீளவும் தமது கட்டுப்பாட்டில் எடுப்பது காட்டாயமானதாகும்.

கனேடியத் தமிழர்களுக்கும், CTC க்கும் இடையே உள்ள ஆழமான தொடர்பற்ற இடைவெளியை மாநகர, மாகாண, மத்திய அரசாங்கங்கள் அங்கீகரிக்கவேண்டும் எனக் கூட்டு கோரிக்கை விடுக்கிறது. தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவோ அல்லது ‘தமிழர் விழா’வை (TAMIL FEST) நடத்தவோ, CTC க்கு இனியும் தார்மீக அதிகாரம் இல்லை. மேலும், தேர்தல்கள் அரங்கேற்றப்பட்டு, உறுப்பினர் சேர்க்கைக்குத் தடைவிதித்துள்ள குறித்த அமைப்பு, என்ன சட்ட அதிகாரத்தை கொண்டுள்ளது என்பது கேள்விக்குரியது. இது ஒன்ராறியோவில் 2010 ஆம் ஆண்டின், சட்ட நியமங்களின் அடிப்படையிலான நிர்வாகம் மற்றும் இலாப நோக்கற்ற கூட்டு நிறுவனங்கள் குறித்த சட்டம் ஆகியவற்றின் கோட்பாடுகளுக்கு முரணானதாகும்.

கூட்டு பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கிறது:

- 2 -

CANADIAN TAMIL COLLECTIVE
கனேடியத் தமிழர் கூட்டு

- ‘தமிழர் விழா’வை (TAMIL FEST) சமூகத்தின் நலன்களை உண்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு ஒன்றிடம் ரொறன்ரோ நகரம் கையளிக்கவேண்டும். தமிழர்கள், ‘தமிழர் விழா’வை மீளவும் தமது கட்டுப்பாட்டில் எடுக்கும் நேரம் வந்துவிட்டது;
- ‘தமிழ் இருக்கை’ என்ற திட்டத்தைத் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்புடன் இணைந்து, ரொறன்ரோ பல்கலைக்கழகம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

CTC உடனான சமூகத்தின் பிரச்சனைகளை அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களும், ரொறன்ரோ பல்கலைக்கழகமும் கவனத்தில் கொள்ள வேண்டும். CTCயின் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகியுள்ளதால், அது தொடர்ந்தும் இப்பாதையில் பயணிக்க முடியாது.

ஜூலை 31, 2024க்குள் சீர்திருத்தம் நோக்கிய குறிப்பிடத்தக்க, அர்த்தமுள்ள நடவடிக்கை எதனையும் CTC எடுக்காவிட்டால், பொறுப்புக்கூறல், ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, சட்ட நியமங்களின் அடிப்படையிலான நிர்வாகம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் முகமாக கணிசமான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் வரை, CTC உடனான அனைத்துத் தொடர்புகளையும் நிறுத்துமாறு, ரொறன்ரோ நகரம், ஒன்ராறியோ அரசாங்கம், கனேடிய அரசாங்கம், ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு கூட்டு அழைப்புவிடுக்கிறது.

ஊடகத் தொடர்புகளுக்கு; **(+1) 647-560-7013** அல்லது **CanadianTamilCollective@gmail.com**

உண்மையுள்ள,
**கனேடியத் தமிழர் கூட்டு**

# ‘கனேடியத் தமிழர் பேரவை’ அமைப்பு மீது கனேடியத் தமிழர்கள் நம்பிக்கை இழப்பு!

தொடர்ச்சி▲

சேர்க்கைக்குத் தடை விதித்துள்ள குறித்த அமைப்பு, என்ன சட்ட அதிகாரத்தை கொண்டுள்ளது என்பது கேள்விக்குரியது. இது ஒன்ராறியோவில் 2010 ஆம் ஆண்டின், சட்ட நியமங்களின் அடிப்படையிலான நிர்வாகம் மற்றும் இலாப நோக்கற்ற கூட்டு நிறுவனங்கள் குறித்த சட்டம் ஆகியவற்றின் கோட்பாடுகளுக்கு முரணானதாகும்.

கூட்டு பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கிறது:

■ ‘தமிழர் விழா’வை (TAMIL FEST) சமூகத்தின் நலன்களை உண்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு ஒன்றிடம் ரொறன்ரோ நகரம் கையளிக்க வேண்டும். தமிழர்கள், ‘தமிழர் விழா’வை மீளவும் தமது கட்டுப்பாட்டில் எடுக்கும் நேரம் வந்துவிட்டது.

■ ‘தமிழ் இருக்கை’ என்ற திட்டத்தைத் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்புடன் இணைந்து, ரொறன்ரோ பல்கலைக்கழகம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும்.

CTC உடனான சமூகத்தின் பிரச்சினைகளை அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களும், ரொறன்ரோ பல்கலைக்கழகமும் கவனத்தில் கொள்ள வேண்டும். CTC யின் நம்பகத்தன்மை கேள் விக்குள்ளாகியுள்ளதால், அது தொடர்ந்தும் இப்பாதையில் பயணிக்க முடியாது.

ஜூலை 31, 2024க்குள் சீர்திருத்தம் நோக்கிய குறிப்பிடத்தக்க, அர்த்தமுள்ள நடவடிக்கை எதனையும் CTC எடுக்காவிட்டால், பொறுப்புக்கூறல், ஜனநாயகம், வெளிப்படைத்தன்மை, சட்ட நியமங்களின் அடிப்படையிலான நிர்வாகம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தும் முகமாக கணிசமான சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் வரை, CTC உடனான அனைத்துத் தொடர்புகளையும் நிறுத்துமாறு, ரொறன்ரோ நகரம், ஒன்ராறியோ அரசாங்கம், கனேடிய அரசாங்கம், ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கு கூட்டு அழைப்பு விடுக்கிறது.




# கியூபெக்கின் சில பகுதிகளில் மதுபானம் கூடுதலாக விற்பனை

கியூபெக், ஜூலை 18

கியூபெக் மாகாணத்தின் சில பகுதிகளில் காணப்படும் மதுபான கடைகளில் வழமைக்கு மாறான கூடுதல் விற்பனை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒன்ராரியோ மாகாண எல்லை பகுதியில் அமைந்துள்ள கடைகளில் இவ்வாறு அதிகளவு மதுபான வகைகள் விற்று தீர்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் முதல்நிலை மதுபான விற்பனை நிலையங்களில் ஒன்றான எல்.சீ.பீ.ஓ.இன் தொழிற்சங்கப் போராட்டம் காரணமாக இவ்வாறு மக்கள் அதிக அளவில் மதுபானத்தை கொள்வனவு செய்து களஞ்சியப் படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

எல்.சீ.பீ.ஓ நிறுவனத்தில் கடந்த இரண்டு வாரங்களாக தொழிற்சங்க போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஒன்ராரியோ மாகாணத்திற்கு அருகாமையில் காணப்பட்ட சுமார் 20 முதல் 25 மதுபான கடைகளில் அதிக அளவு மதுபானங்கள் விற்று தீர்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 5ம் திகதி முதல் சுமார் பத்தாயிரம் பணியாளர்கள் இவ்வாறு தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்றாரியோ மாகாணத்தில் மதுபான விற்பனை விஸ்தரிப்பு திட்டத்திற்கு எல்.சீ.பீ.ஓ.நிறுவன பணியாளர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.



# நான்கு பழங்குடிப் பெண்கள் கொலை; சுயாதீன விசாரணைக்குக் கோரிக்கை

மனிடோபா, ஜூலை 18

மனிடோபா மாகாணத்தில் நான்கு பழங்குடிப் பெண்கள் கொல்லப்பட்டமை குறித்து சுயாதீன விசாரணையை நடத்துமாறு மனிடோபாவின் லெப்டினன்ட்-கவர்னரை பழங்குடிகள் பேரவையின் தேசியத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸ் விசாரணை மற்றும் கொலைகளுக்கான மாகாண பிரதிபலிப்பை மதிப்பிடுவதற்கு விசாரணை கோரும் தீர்மானத்தை பழங்குடிகள் பேரவை நிறைவேற்றிய சில நாள்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது.

இது குறித்து லெப்டினன்ட் கவர்னருடன் ஒரு பயனுள்ள சந்திப்பை நடத்தினர் என்ச் பழங்குடிகள் பேரவையின் தேசியத் தலைவர் சிண்டி வூட்ஹவுஸ் நேபினாக் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு ஒரு செயல்முறையின் ஆரம்பம் என்று வூட்ஹவுஸ் நேபினாக் கூறியுள்ளார்.



## அமைச்சரவையின்...

தெரிவித்துள்ளது.

சில கவர்னர்-இன்-கவுன்சில் நியமனங்களை அறிவிக்கும் முன் அமைச்சரவை ஒப்புதல் அளிக்க வேண்டுமென்பது அவசியமாகும்.

கடந்த மாதம் டொரான்டோ இடைத் தேர்தலில் லிபரல்களின் தோல்விக்குப் பிறகு முதல் முறையாக அமைச்சரவை அமைச்சர்கள் சந்திக்கும் கூட்டமாக இது உள்ளது.

கோடை காலத்தில் அமைச்சரவை அடிக்கடி சந்திக்காதிருப்பது அசாதாரணமானது அல்ல.

## டொரன்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன போக்குவரத்து நெரிசல் நிலைமைகளினால் பெரும் எண்ணிக்கையிலான தொழிலாள சக்தியினர் வேறு பகுதிகளுக்கு இடம்பெயரத் திட்டமிட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பணிக்காக பயணங்களை அதிக நேர விரய சிரமத்துடன் மேற்கொள்வதற்கு விரும்பவில்லை என டொரன்டோவை சேர்ந்த 62 வீதமானவர்கள் தெரிவித்துள்ளனர்.

வாகனப் போக்குவரத்து நெரிசல் நிலைமைகள் காரணமாக அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என டொரன்டோ நகர மக்கள் வருத்தம் வெளியிட்டுள்ளனர்.

இதனால், வர்த்தக நிலையங்களுக்குச் செல்லவும், விளையாட்டு அல்லது பொழுதுபோக்கு நிகழ்வுகளில் பங்கேற்பதற்குச் செல்லவும் அவர்கள் தயங்குகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

31 வீதமான மக்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளுக்கு செல்வதை தவிர்த்துக் கொள்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து நெரிசலின் அடிப்படையில் மக்களின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் வருமானத்திலும் தொழில்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பல்வேறு துறைகளையும் இது பாதிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கட்டுமான பணிகள் காரணமாக அதிக அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பாதுகாப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சதவீதத்தை பாதுகாப்பிற்காக செலவிட கனடாவின் நேட்டோ உறுதிப்பாட்டின் முக்கியத்துவத்தை மாகாண முதல்வர்கள் எடுத்துக்காட்டினர்.

'உலக அரங்கில் அந்த கடமைகளை நாங்கள் சந்திப்பது மிகவும் முக்கியமானது' என்று நோவா ஸ்கோடியா பிரீமியர் டிம் ஹூஸ்டன் புதன்கிழமை கூறினார்.

'கனடாவிற்கும் அமெரிக்காவுடனான அதன் உறவுக்கும் - நாங்கள் குறிப்பிடத்தக்க வர்த்தக பங்காளிகள், கடமைகளை மதிக்கும் திறன் உட்பட அனைத்து அம்சங்களிலும் அவர்கள் எங்களை முழுமையாக மதிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த வாரம், பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோ, 2032இல் நேட்டோவின் பாதுகாப்பு செலவின இலக்கை அடைய எதிர்பார்ப்பதாகக் கூறியிருந்தார்.

இதேவேளை, கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியேவ், நேட்டோ கூட்டணியின் செலவின இலக்கை உறுதி செய்யப் போவதில்லை என்று கூறியுள்ளார்.



# காற்றுச் சீராக்கிகளின் பயன்பாடு கனடாவில் கணிசமாக அதிகரிப்பு

கனடாவில் கடந்த ஒரு தசாப்த காலமாக காற்றுச் சீராக்கிகளின் (குளிரூட்டிகளின்) பயன்பாடு அதிகரித்துள்ளதாக அந்நாட்டு புள்ளிவிவரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

தற்பொழுது சுமார் 68 வீதமான அளவில் காற்று சீராக்கிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது.

நாட்டில் வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக இவ்வாறு பெரும் எண்ணிக்கையிலானவர்கள் காற்று சீராக்கிகளை கொள்வனவு செய்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரவில் உறக்கம் கொள்ள முடியாத காரணத்தினால் பலரும் இவ்வாறு காற்று சீராக்கிகளைகளை வீடுகளில் பொருத்திக் கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அல்பர்ட்டா போன்ற பகுதிகளில் அதிக அளவில் இவ்வாறு காற்று சீராக்கிகள் தற்பொழுது பயன்படுத் தப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய புள்ளி விவரத் தகவல்களின் அடிப்படையில் கல்கரியில் சுமார் 32 வீதமான வீடுகளில் காற்று சீராக்கிகள் காணப்படுகின்றன. இது கடந்த பத்து ஆண்டுகளில் 19 வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலநிலை மாற்றம் உள்ளிட்ட காரணிகளினால் இவ்வாறு காற்றுச் சீராக்கிகளின் பயன்பாடு வெகுவாக அதிகரித்துள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வெப்பநிலை அதிகரிப்பு மற்றும் காட்டுத்தீ போன்ற காரணிகளினால் இவ்வாறு காற்று சீராக்கியின் பயன் பாடு அதிகரித்துள்ளது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# பிரின்ஸ் ஒவ் எட்வேர்ட் தீவிலும் மாணவர் வகுப்பில் அலைபேசி பயன்படுத்தத் தடை



கனடாவின் பிரின்ஸ் ஒவ் எட்வேர்ட் தீவு பகுதியில் மாணவர்கள் வகுப்பறையில் அலைபேசியை பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆண்டில் இந்த தடை நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரின்ஸ் ஒவ் எட்வேர்ட் மாகாண அரசாங்கம் இது தொடர்பில் அதிகாரப்பூர்வ அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

எவ்வாறு எனினும் தரம் 7 முதல் 12 வரையிலான மாணவர்கள் கல்வியியல் நோக்கத்திற்காக அலைபேசிகளை பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள், அனுமதி வழங்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அலைபேசியைக் கொண்டு மோசமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும், அவற்றைத் தடுப்பதற்கு இவ்வாறு தடை விதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விசேட தேவையுடைய மற்றும் மருத்துவ தேவையுடைய மாணவர்கள் அலைபேசியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நியூ பிரவுன்ஸ்விக், நோவா ஸ்கோசியா போன்ற பகுதிகளில் அலைபேசியை பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது